# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு



உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன். எமது ஞாயிறு திருப்பலிகளை நேரலையாக மீண்டும் ஒளிபரப்புவது பற்றிய தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் உங்களோடு சேர்ந்து செபிக்கும் சங்கீதம் 91 இனை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

“உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, நீரே என் புகலிடம் என் அரண் நான் நம்பியிருக்கும் இறைவன்“ என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன் அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன். நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன் என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.“

ஞாயிறு திருப்பலிகளிலும் விசேட திருப்பலிகளிலும் உங்களைக் காண்பதிலும் உங்களோடு இணைந்து திருப்பலிகளை ஒப்புக்கொடுப்பதிலும் மகிழ்ச்சியடைவதுடன் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியையும் கூறி நிற்கின்றேன்.

எமது ஆலயத்திற்கு திருப்பலிகளுக்கு வரமுடியாதிருக்கும் எமது பங்கு மக்களின் ஆன்மீக நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மதியம் 1:00 மணிக்கு ஆலயத்தில் நடைபெறுகின்ற திருப்பலியை நேரலையாக எமது ஆலய இணையத்தளத்துலும் முகப்புத்தக பக்கத்திலும் ஒளிபரப்பு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

**ஞாயிறு திருப்பலிகளுக்கு அனுசரணை வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். அவர்களின் விபரங்கள் திருப்பலிகளின் போது அறிவிக்கப்படும். முதலில் வருகின்றவர்களுக்கு முதல் வாய்ப்பு என்ற அடிப்படையில் ஒவ்வொரு ஞாயிறு திருப்பலிக்கும் முதல் மூன்று அனுசரணையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (அனுசரணையாளர் ஒருவர்.˙.குடும்பத்தினரிடமிருந்து $100.00 அன்பளிப்பாக பெறப்படுவதோடு, அதற்குரிய வரிவிலக்கு பற்றுச்சீட்டும் வழங்கப்படும்).**

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,

அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்
பங்குத்தந்தை - ரொறன்ரோ தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு
416-264-6544 / 647-671-8272
office@olghtamilparish.com